1975 ஏப்ரல் 7]

(இ) ஆம். அரசு வருவாய்த் துறை செயலாளர், வனத் துறைத் தலைவர், அகதிகள் புதுவாழ்வு இயக்குநர் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(உ) ஹைதராபாத்தில் 1974 ஆம் ஆண்டு ஜுன் திங்களில் நடைபெற்ற தென் மாநிலங்கள் அகதிகள் புதுவாழ்வுத் துறைக் கமிஷனர்கள்/செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட குறிப்பின் நகல் ஒன்று சட்ட மன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: மண்டபம் போன்ற இடங்களில் பர்மா அகதிகள் ஆகட்டும் அல்லது கன்னியாகுமரியில் உள்ள சிலோன் அகதிகள் ஆகட்டும் ரப்பர் தோட்டங்களில் மிகக் குறைவான கூலியில் வேலை செய்யக்கூடிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. பலவகைகளில் அந்த அகதிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு உதவ திட்டம் தீட்டப் பட்டதா இந்த மாநாட்டில்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்—

ஸ்ரீஇலங்கா அகதிகளை மலைத்தோட்டங்கள், தொழில் தோட்டங்கள், நிலக்குடியேற்றத் திட்டங்கள் ஆகியவற்றில் அமர்த்துவது பற்றி ஆய்வு செய்தல்.

ரொக்க உதவித் தொகை கொடுப்பதன் மூலம் தனிப்பட்ட தொழில் அதிபர்களின் நிறுவனத்தில் அகதிகளுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்.

அகதிகள் கூட்டுறவு நிதி வழங்கு வள வங்கிகளில் மேம்பாட்டு பிரிவு ஒன்றை ஏற்படுத்தல்.

வணிகக் கடன்கள், வீட்டு வசதி கடன்கள் ஆகியவற்றின் உச்சவரம்பை உயர்த்துதல்.

அரசுத் துறை நிறுவனங்களில் தொழில்களிலும், புதுவாழ்வுத் திட்டங்களிலும் அகதிகளுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்.

இவற்றையெல்லாம் நிறைவேற்றிக் கொடுத்துவருகிறோம். ஏதாவது குறைபாடுகள் இருந்தால் கட்டாயம் அதைக் கவனிக்கிறோம்.

(முற்பகல் 10-00)

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த அகதிகள் புனர் வாழ்வு திட்டத்தின் அடிப்படையிலே பல்வேறு இடங்களில் குடி அமைப்பு செய்வதற்கு திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். ஆனால் இந்த திட்டங்களெல்லாம் முழுமை பெறவில்லை. உதாரணத்திற்கு வியாசர்பாடி போன்ற பகுதியில் இருக்கிறவர்கள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு 3 செண்ட் நிலமாவது கொடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன். அதுவல்லாமல் அவர்களுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் குறைவாக இருக்கிறது. அதையும் சற்று உயர்த்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாவென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, சமீபத்தில்தான் அவர்கள் இங்கு வந்து ஒரு கூட்டமே கூட்டி, அதிகாரிகளை வைத்து ஆலோசனை நடத்தி அவர்களுக்கு இடங்கள் ஒதுக்குவது பற்றி முடிவு எடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் கொடுக்கிற நிதி கட்டிடத்திற்குப் போதவில்லை என்ற காரணத்தினால் மீண்டும் கேட்டிருக்கிறோம். அவர்கள் கொடுக்கவில்லையென்றால் தமிழக அரசே செய்வதற்கு முதலமைச்சரவர்களைக் கலந்து ஆவன செய்யலாம் என்று முடிவு செய்திருக்கிறோம்.

சீத்தாபுரம் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

*579 வினா—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுப்பாக்கம் தொகுதியில் சீத்தாபுரம் அரிசன குடியிருப்பில் உள்ளவர்களுக்கு அந்த இடத்தை பட்டா செய்து தரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) & (இ) சீதாபுரம் அரிசன காலனியில் உள்ள அரிசனங்களுக்கு வீட்டுமனை வசதி அளிப்பதற்காக திம்மாபுரம் கிராமத்தில் 6.75 ஏக்கர் புஞ்சை